## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



குழந்தை பருவத்தில் இருந்தே சிறுவர்களிடம் கருணையை பதிய வைக்கவேண்டும். பள்ளியில் பயிலும் பொழுதும் தங்களுடன் படிக்கிறவர்களுக்கு எவ்வித சிறு உதவியையும் அளிக்க மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். இரண்டு மனிதர்கள் சண்டை போடுவதை நாம் பார்த்தால் அவர்களை சமாதானப்படுத்தி சண்டையை நிறுத்த முயற்சிப்பது நம் கடமை. கருணை நிறைந்தவர்களால் தான் இம்முயற்சியில் ஈடுபட முடியும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## सुभाषितानि
## நல்லுரைகள்

अमर्षशुन्येन जनस्य जन्तुना न जातहार्देन न विद्विषाऽऽदरः । அமர்ஷஶூன்யேன ஜனஸ்ய ஜந்துனா ந ஜாதஹார்தே³ன ந வித்³விஷா(ஆ)த³ர꞉ | = மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமென்றால் பொறாமையின்றி, விருப்பு வெறுப்பின்றி தன்னை எவருக்கும் எதிரியாக்கிக் கொள்ளாத ஒருவனுக்கு தான் சாத்தியம்.

अमृतं राहवे मृत्युः विषं शंभोर्विभूषणम् । அம்ரு’தம்’ ராஹவே ம்ரு’த்யு꞉ விஷம்’ ஶம்போ⁴ர்விபூ⁴ஷணம் | = திருப்பாற்கடலிலிருந்து தோன்றிய அமுதம் கூட ராஹுவிற்கு அழிவைத் தந்தது. விஷமோ சிவபெருமானது கழுத்துக்கு அணிகலமானது.

अनिक्षुपादपे देशे मधूककुसुमं सिता ।அனிக்ஷுபாத³பே தே³ஶே மதூ⁴ககுஸுமம்’ ஸிதா| கரும்பில்லாத ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

आरोग्यमानृण्य मविप्रवासः सद्भिर्मनुष्यैस्सह संप्रयोगः |
स्वप्रत्ययावृत्तिरभीतवासः षड्जीवलोकस्य सुखानि राजन् ||५०||



அர்தா2க3மோ நித்யமரோகி3தா ச ப்ரியா ச பா4ர்யா ப்ரியவாதி3தா ச |
வஶ்யஶ்ச புத்ரோ(அ)ர்த2கரீ ச வித்3யா ஷட்3 ஜீவலோகஸ்ய ஸுகா2னி ராஜன் ||

மனித உலகத்திற்கு ஸுகத்தை தருகின்றன வியாதியின்மை, கடனில்லாமை, வெளியூர்களுக்கு அடிக்கடி அலையாமலிருத்தல், ஸாதுக்களின் சேர்க்கை, தன் புத்தி பலத்தினால் ஜீவித்தல், பயமில்லாமல் குடி இருத்தல், என்ற இந்த ஆறும்.

अष्टौ पूर्व निमित्तानि नरस्य विनशिष्यतः |
ब्राम्हणान् प्रथमं द्वेष्टि ब्राम्हणैश्च विरुध्यते ||
ब्राम्हणस्वानिचादत्ते ब्राम्हणांश्च जिघांसति |
रमते निन्दयाचैषां प्रशंसां नाभिनन्दति ||
नैनान् स्मरति कृत्येषु याचितश्चाभ्यसूयति |
एतान्दोषान्नरःप्राज्ञः बुद्धयेत् बुध्वा विसर्जयेत् ||५१||

அஷ்டௌ பூர்வ நிமித்தானி நரஸ்ய வினஶிஷ்யத: |
ப்3ராம்ஹணான் ப்ரத2மம்' த்3வேஷ்டி ப்3ராம்ஹணைஶ்ச விருத்4யதே ||
ப்3ராம்ஹணஸ்வானிசாத3த்தே ப்3ராம்ஹணாம்'ஶ்ச ஜிகா4ம்'ஸதி |
ரமதே நிந்த3யாசைஷாம்' ப்ரஶம்'ஸாம்' நாபி4னந்த3தி ||
நைனான் ஸ்மரதி க்ரு'த்யேஷு யாசிதஶ்சாப்4யஸூயதி |
ஏதாந்தோ3ஷான்னர:ப்ராஜ்ஞ: பு3த்3த4யேத் பு3த்4வா விஸர்ஜயேத் ..51

மனிதன் நாசத்தை அடைவதற்கு முன்பு எட்டு அறிகுறிகள் ஏற்படும். முதலில் பிராம்மணர்களைத் துவேஷிப்பான், பிராமணர்களுடன் விரோதிப்பான், பிராம்மணர்களுடைய பொருள்களை அபகரிப்பான், பிராம்மணர்களைக் கொல்ல விரும்புவான், பிராம்மணர்களை பிறர் தூஷிப்பதைக் கண்டு சந்தோஷப்படுவான், பிராம்மணர்களை புகழ்வதைக் கண்டு துக்கிப்பான், நல்ல காரியங்களில் பிராம்மணர்களை அழைக்க மாட்டான். பிராம்மணர்கள் யாசிப்பதைக் கண்டு அஸூயைப்படுவான். புத்தியுள்ள மனிதன் இவைகள் எட்டும் நாசத்தை அளிக்கும் தோஷங்களென உணர்ந்து அவைகளை விட்டு விட வேண்டும்.

(தொடரும்....)

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## பாபங்கள் பத்து வகை

பகவான் கீதையிலே சொல்லியிருக்கின்றார்:

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ ஞாத்வா
சாஸ்த்ரவிதானோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி "

அதாவது, "எதைச் செய்யலாம்? எதைச் செய்யக் கூடாது? நாம் எதைக் செய்தால் நமக்கு நல்லதாகும்? எதைச் செய்தால் நமக்குக் கெட்டதாகும்?" என்பதைத் தீர்மானம் செய்ய நம்மால் முடியாது. ஒவ்வொருவனுடைய புத்தியும் ஒரே வழியில் போகும் என்று சொல்ல முடியாது. ஆகவே, சாஸ்திரம்தான் பிரமாணம். இந்த தர்ம அதர்மங்களைப் பற்றி தீர்மானமாகச் சொல்வதற்குச் சாஸ்திரம் ஒன்றிற்குத்தான் உரிமை உண்டு, சாஸ்திரம் எதைச் சொல்கின்றதோ அதைத்தான் நாம் அனுசரிக்க வேண்டும். சாஸ்திரத்தின் மூலமாகத் தான் எது பாபம், எது புண்ணியம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். சாஸ்திரத்தில் ஓரிடத்தில் புண்ணிய பாபங்களைச் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.




நாம் செய்யக்கூடிய தவறான காரியங்களை மூன்று விதமாகப் பிரித்திருக்கிறார்கள். 1. நாம் நம் மனதாலே சில தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். 2. நாம் நம் வாக்கினாலே சில தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். 3. இந்தச் சரீரத்தாலே சில தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த மூன்று விதமான பாபங்களை நாம் செய்யவில்லை என்றால் நமக்குத் துக்கத்தை அனுபவிக்க வேண்டிய நிலையே வராது. சாஸ்திரத்தில், அந்த மூன்று விதமான பாவங்களை,

பரத்ரவ்யேஷ்வபி த்யானம் மனஸாநிஷ்ட சிந்தனம் |
விததா5பினிவேசச்ச த்ரிவிதம் மானஸம் ஸ்ம்ருதம் |

என்று வகைப்படுத்தியுள்ளனர்.

முதலில், மனத்தால் செய்கின்ற பாபங்களைச் சொல்லும் போது "பரத்ரவ்யேஷ்வபித்யானம்" என்றார்கள். மற்றவருடைய சொத்தை அபகரிக்க வேண்டும் என்னும் எண்ணம் மனதிலே உண்டாவதுதான் அது. சாதாரணமாக, மனிதன், தான் என்ன செய்ய வேண்டும் என்று மனதிலே யோசிப்பான். பின்னர் அதைச் செய்ய வேண்டியதற்கான முயற்சியை ஆரம்பிப்பான். வேதம்,

தஸ்மாத் யத் புருஷோ மனஸாதிகச்சதி
தத்வாசா வததி தத் கர்மணா கரோதி

என்று சொல்கின்றது. மனதிலே எதை நினைப்பானோ, அதைத்தான் பேசுவான். பின்னர் அதைத்தான் செய்யமுற்படுவான். ஆகையால், மனதில் இன்னொருவனுடைய சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றினால் அது நாம் முதலிலே செய்யக்கூடிய பாபம் ஆகும். அநேகம் பேர், "நான் ஒன்றும் மற்றவருடைய சொத்தை அபகரிக்கவில்லையே" என்று சொல்வார்கள். இதற்கு எதிராக நாம் ஒரு வாதம் கொடுக்கலாம். "மனதில் அந்த எண்ணம் வந்த சமயத்தில் சூழ்நிலை சரியில்லை. எனவேதான் உன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்று நாம் கூறிவிடலாம். ஆகவே, மனதிலே அபகரிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்ததே முதல் பாபம். அதேபோல்,

மனஸா அனிஷ்டசிந்தனம்

இன்னொருவனுக்கு இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் வந்தால், அது இன்னொரு மானஸிக பாபம். நம்முடைய பாரதீய கலாச்சாரத்தில் மூலபூதமாக ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாத்ருவத் பரதாரேஷு பரத்ரவ்யேஷு லோஷ்டவத் |
ஆத்மவத் ஸர்வபூதேஷு ய: பச்யதி ஸ பச்யதி ||

மேற்சொன்னவற்றை நாம் மறக்கவே கூடாது. அதாவது, எந்த ஸ்த்ரீயைப் பார்த்தாலும் நமக்குத் "தாயார்" என்னும் எண்ணம் இருக்க வேண்டும். நாம் தெருவிலே கிடக்கும் கல், மண் இவற்றை எவ்வாறு கண்டு கொள்ளாமல் செல்வோமோ அதேபோல் இன்னொருவருடைய சொத்தையும் கண்டுகொள்ளக் கூடாது. அடுத்தது, மிகவும் முக்கியமான விஷயம். "எல்லோரும் என்னைப் போல்தான்" என்ற எண்ணம் வேண்டும். யாராவது ஒருவன் என்னைப் பற்றித் தவறாகச் சொன்னால் என் மனதிற்கு எப்படித் துன்பம் உண்டாகுமோ, அதேபோல்தான், நான் இன்னொருவனைப்பற்றித் தவறாகச் சொன்னால், அவன் மனமும் துன்பப்படும் என்று நாம் எண்ண வேண்டும். (தொடரும் .....)

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஶ்ரீ ஸூக்தம்



21. அக்கினி தேவனும், வாயுதேவனும், சூரிய பகவானும், வசுக்களும், இந்திரனும், பிருகஸ்பதியும், வருண தேவனும் தத்தம் செல்வத்தை உன் அருளாலேயே அனுபவிக்கிறார்கள்.

22. சந்திரனைப்போல் குளிர்ந்து பிரகாசிப்பவளும், தெய்வங்களின் ஆற்றலாக விளங்குபவளும், சூரியனைப்போல் பிரகாசிப்பவளும், திருமகளும், தலைவியும், சந்திரன் சூரியன் அக்கினி ஆகிய மூவரையும் மகிமையாகக் கொண்டவளுமான ஸ்ரீமகாலட்சுமியை வழிபடுகிறோம்!

23. கருடனே! சோம ரசத்தைப் பருகு. விருத்திராசுரனைக் கொன்றவனான இந்திரன் சோம ரசத்தைப் பருகட்டும். சோம யாகம் செய்ய விரும்புகின்ற எனக்கு ஏராளமான செல்வத்தைத் தரட்டும்!

24. புண்ணியம் செய்த பக்தர்களுக்குக் கோபம் வருவதில்லை, பொறாமை வருவதில்லை, கருமித்தனம் வருவதில்லை, கெட்டபுத்தி வருவதில்லை. பக்தி பெறுவதற்காக அவர்கள் ஸ்ரீஸூக்தத்தை எப்போதும் ஜபிக்க வேண்டும்.

25. உன் கருணையால் மேகங்கள் மின்னலுடன் இரவும் பகலும் மழை பொழியட்டும். எல்லா விதைகளும் நன்றாக முளைத்து வளரட்டும். கடவுளை நிந்திப்பவர்கள் விலகி விடட்டும்!

(தொடரும்..)

ஸத் ஸம்ப்ரதாயம்
(An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்
### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்
## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை



"... கைபு ராமா சாஸ்திரிகள் (ஆசார்யாளின் தந்தையார்) முனிசிபல் சிறுவர் பள்ளியில் உபாத்யாயர். பையன்கள் வீட்டு வேலை (வீட்டுப்பாடம்) செய்யாமல் இருந்தாலும் அல்லது வகுப்பில் கேள்விக்குச் சரியான பதில் சொல்லாவிட்டாலும் அவர்களைத் தடியால் அடித்துக் கண்டிப்பார். அப்படிப்பட்டவர்களில் பலர் ஸ்ரீனிவாஸரின் விளையாட்டுத் தோழர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்குத் தண்டனை விழக்கூடாது என்பதற்காக, எந்தெந்தப் பாடங்களில் அவர்களுக்குப் புத்தி குறைவு இருந்ததோ அந்தப் பாடங்களைத் தனியாக அவர்களுக்கு ஸ்ரீனிவாஸர் சொல்லிக்கொடுப்பதுண்டு (குறிப்பாகக் கணிதமும் இங்கிலீஷ் எழுத்துகளும்). வயது வந்த பையன்களை விட ஸ்ரீனிவாஸரின் போதனா முறை விசேஷமானதாக இருந்தது என்பார்கள். இச்சிறு ஸேவைக்கு அவருடைய ஸ்னேஹிதர்களும், அவர்களின் பெற்றோர்களும் ஸ்ரீனிவாஸரிடம் நன்றி உள்ளவர்களாக இருந்தார்கள். எந்த வீட்டுக்குப் போனாலும் ஸ்ரீனிவாஸருக்கு நல்வரவு உண்டு.



ஆசார்யாள் துறவியான பின்னரும், அவர் தமது சிஷ்யர்களுக்கு மிகுந்த ஊக்கத்துடன் கல்வி கற்பித்தார் என்பது ஆசார்யாளின் வரலாற்றில் பதிவாகியுள்ளது:

"... தாம் கற்றதைத் தாமே வைத்துக் கொள்வது என்பதில் ஆசார்யாளுக்கு ஒருபொழுதும் உடன்பாடில்லை. தர்க்க சாஸ்திர நூல்களை அவர் பலமுறை பல மாணவர்களுக்குக் கற்பித்தார். இதன் மூலம் அவர் தமது மாணவர்களைப் பண்டிதர்கள் ஆக்கினார். அவர்களும் தாம் கற்றது அனைத்தையும் ஏனையோருக்குக் கற்பிக்கும் தகுதியையும் பெற்றனர்.

ஆசார்யாள் பாடம் சொல்லும் பொழுது பாடத்தின் துவக்கத்தில் சில பொதுவான கருத்துகளைக் கூறுவார். பின்னர், எடுத்துக்கொண்ட நூற்பகுதியைப் படிப்பார். அதற்கு விரிவாகப் பொருள் கூறிய பின், மீண்டும் அதே நூற்பகுதியை ஒரு


## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

தடவை படித்து. அடுத்த பகுதிக்குச் செல்வார். வினாக்களை வரவேற்பார். ஐயங்களைத் தீர்ப்பதில் பெரும் உற்சாகம் காட்டுவது வழக்கம். ஒரு ஐயத்தை நன்கு தீர்க்கவேண்டும் என்பதற்காகப் பல மேற்கோள் நூல்களை நாடுவார். சில சமயங்களில் தான் கொடுத்த விளக்கம் தனக்கே திருப்தியளிக்காதது போல், அதைப் பற்றி மேலும் சிந்தித்து, பல நூல்களை ஆராய்ந்து அடுத்த நாள் அதை வகுப்பில் மீண்டும் விளக்குவார்.

கல்வியிற் சிறந்த ஆசிரியர் மேலும் கற்பதில் ஊக்கமாக இருப்பார் என்பதைக் கல்வி பயில்விப்பவர் எல்லோரும் அறிவர். இந்த இயல்பை நாம் ஆசார்யாளிடம் முழுமையாகக் காண்கிறோம். எப்படிக் கிணற்றில் தோண்டிய அளவில் நீர் ஊற்று எடுக்கிறதோ, அதே போல் அறிவும் மேன்மேலும் கல்வி கற்பதனால் வளர்ச்சி அடைகிறது என்று குறள் கூறுகிறது.3

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு

(பரிமேலழகர் உரை: மணற்கேணி தொட்ட அனைத்து ஊறும் மணலின்கண் கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும்; மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும் அது போல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும். ஈண்டு 'கேணி' என்றது அதன்கண் நீரை. 'அளவிற்றாக' என்றது அதன் அளவும் செல்ல என்றவாறு. சிறிது கற்றுணையான் அமையாது, மேன்மேல் கற்றல் வேண்டும் என்பதாம்.)

ஒரு பீடாதிபதியாக இருந்ததால் ஆசார்யாளுக்குப் பலவித காரியங்களைச் செய்விக்கவும் செய்யவும் வேண்டியிருந்தது. அப்படியிருப்பினும் படிப்பதற்கு நேரம் ஒதுக்குவதில் அவர் குறிப்பாக இருந்தார். சில சமயங்களில் அவர் முன்னிலையில் பாத பூஜை போன்றன நடக்கும் போதும் புத்தகம் ஏதாவது ஒன்று அவர் கைகளில் இருக்கும். படிப்பிற்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை இந்நிகழ்ச்சியில் பார்க்கிறோம்:

"...கூடலூர் கிருஷ்ண சாஸ்திரிகள் ஒரு முறை சிருங்கேரிக்கு வந்த போது நரஸிம்ஹ வனத்தில் தங்கியிருந்தார். ஒரு நாள் காலை அவர் ஆசார்யாளைத் தரிசனம் செய்யும் போது, 'நேற்று நள்ளிரவிற்குப் பின்னும் ஆசார்யாளின் அறையில் விளக்கு எரிவதைப் பார்த்தேன். ஆசார்யாள் நேற்றுத் தூங்கவில்லையா?' என்று கேட்டார். அதற்கு ஆசார்யாள், தமக்கு முந்தைய தினம் உடல் நலம் சற்று குன்றியிருந்தது என்றும், காய்ச்சல் இருந்ததால் உறக்கம் வரவில்லை, எனவே நேரத்தை வீணாக்காமல் வேதாந்த நூல் ஒன்றைப் படித்ததாகவும் கூறினார்." (தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்
(An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ
ஶ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 5
### ஆஹார சுத்தி

நாம் பொதுவாக ஸுகத்தை அபேக்ஷிக்கிறோம். ஸுகமென்பது என்னவென்று கவனித்துப்பார்த்தால், ஆரோக்யம் என்பது ஸுகம், பலம் என்பது ஸுகம், விஷய போகம் என்பது ஸுகம், ஞானம் ஸம்பாதிப்பது ஸுகம், சாந்தமாயிருப்பது ஸுகம் என்று பலவிதமாக தோன்றும். அவைகளில் ஒருவித ஸுகத்திற்கு ஸாதனமாயிருக்கிற பதார்த்தம் மற்றொருவித ஸுகத்திற்குக் கெடுதலை உண்டுபண்ணுமேயானால். அப்பதார்த்தத்தை கிரஹிப்பது நியாயமில்லையென்று அறியவேண்டும். ஆகையால் சரீரத்தைப் போஷணம் செய்து பலத்தையோ புத்தி சக்தியையோ குறைக்கக்கூடியதாயிருக்கிற பதார்த்தம் விலக்கத்தக்கதேயாகும். புத்தி சக்தியை அதிகப்படுத்தி பலக்குறைவை உண்டாக்கக்கூடியதும் விலக்கத்தக்கதே. இவ்விதமாக ஒருவித ஸுகத்திற்கும் பாதகமேற்படாமல் கிரஹித்துக்கொண்டால்தான் ஸுகம் நிலைக்கும் என்ற நியாயத்தை வைத்துக்கொண்டுதான் சாஸ்திரத்தில் இன்ன இன்ன பதார்த்தங்களை கிரஹிக்கலாம், இன்ன இன்ன பதார்த்தங்களை கிரஹிக்கக்கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கிறது.



பதார்த்தங்களின் தன்மைகளை உத்தேசித்துச் சிலது ஸ்வபாவத்தினாலேயே விலக்கத்தக்க வேண்டியதாக இருக்கும். சில பதார்த்தங்கள் ஸ்வபாவத்தில் தோஷமில்லாதிருந்தபோதிலும், சேர்க்கையினால் கிரஹிக்கக் கூடாததாக இருக்கும். சிலது ஸ்வபாவத்தில் துஷ்டமில்லாமலும், சேர்க்கையினால் துஷ்டமில்லாமலும் இருந்தபோதிலும், மனதில் விபரீதமான எண்ணத்தை உண்டுபண்ணுமேயானால். அவைகளையும் விலக்க வேண்டுவது அவசியம். இவ்விதம் மூன்றுவித தோஷங்களும் இல்லாமலிருந்தபோதிலும், இன்னொருவருடைய மனோபாவத்தினால் அந்தப்பதார்த்தம் துஷ்டமாய் விடலாம் . அப்பொழுது அதையும் விலக்க வேண்டியதுதான். இந்த நான்குவித

## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

தோஷங்களையும் முறையே ஸ்வபாவ துஷ்டம், ஸம்ஸர்க்க துஷ்டம், ஆகருதி துஷ்டம், பாவ துஷ்டம் என்று சொல்லுவார்கள். இவை ஒவ்வொன்றையும் எடுத்து விஸ்தரிப்பதானால் மிகவும் விரிவாக ஆகிவிடுமாதலால் சிற்சில திருஷ்டாந்தங்களை மாத்திரம் இங்கு காண உத்தேசம்.

ஸ்வபாவத்திலேயே துஷ்டமான பதார்த்தங்கள் என்னவெல்லாம் என்று குறிப்பிட்டு தர்ம சாஸ்திரங்களில் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. அப்பதார்த்தங்களில் அம்சம் இல்லையென்று அர்த்தமில்லை. நல்ல ஜகத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிற எல்லாப்பதார்த்தங்களிலுமே நல்ல அம்சங்களும் கெட்ட அம்சங்களும் கலந்துதான் இருக்கும். அப்படியிருந்தும் நல்ல அம்சங்களைவிடக் கெட்ட அம்சங்கள் மேல்தூக்கி நிற்கும் விஷயத்தில் அவைகளை விலக்கவேண்டியதே நியாயம். அப்பதார்த்தங்களையும் சில ஸமயங்களில் உபயோகப்படுத்தி அவைகளினால் ஏற்படும் நன்மைகளையும் அடைவதற்கு அவகாசம் ஏற்படும். ஆனாலும் அவைகளை கிரஹிப்பது தோஷமேயாகும். அந்த தோஷ நிவிருத்திக்காகப் பிராயச்சித்தமோ, பரிஹாரமோ செய்யவேண்டியது உண்டு. உதாஹரணமாக உள்ளிப்பூண்டையும் வெங்காயத்தையும் எடுத்துக் கொள்ளுவோம்.

தேவர்களும் அஸுரர்களும் பால்கடலைக் கடைந்து அமிருதம் கிடைத்தபோது, அதை வினியோகம் செய்வதற்காக பகவான் மஹாவிஷ்ணுவே மோஹினி ரூபம் தரித்து, இருதரத்தார்களையும் உட்காரச் செய்து, தானே அமிருதத்தை விளம்ப ஆரம்பித்தார் என்று புராணங்களில் காண்கிறது. அவர் தேவர்களுக்கே கொடுத்து வருவதாகத் தெரிந்துகொண்ட ஒரு அஸுரன், ஸூரியன் சந்திரன் இருவர்களுக்கும் மத்தியில் கையை நீட்டி அமிருதத்தை வாங்கி உடனே வாயில் போட்டுக்கொண்டுவிட்டான். இதை அறிந்த பகவான் தன் கையிலிருந்த ஆப்பையினால் அவன் தலையைத் தட்டிவிட்டபோது, தலை ஒரு பக்கம் உடல் ஒரு பக்கமாக விழுந்துவிட்டது.ஆனால் அமிருதம் உள்ளே போயிருப்பதால் இரண்டும் சாகாமலே இருந்துகொண்டு ஜீவித்திருந்தன. தலையில்லாத உடம்பிலிருந்து பாம்புபோல் ஒரு தலை ஏற்பட்டது. உடம்பில்லாத தலைக்குப் பாம்பு போல ஒரு உடம்பு ஏற்பட்டது. இவ்விருவர்களையே ராஹு, கேது என்று சொல்லுவார்கள். உடம்பிலிருந்து தலை அறுபட்டு விழும்போது கழுத்திலிருந்த கபமும் ரத்தமும் பூமியில் சொட்டின. அவைகளிலும் அமிருதத்தினுடைய ஸம்பந்தம் இருந்தது. அந்த கபம் சொட்டின இடத்திலிருந்துகச் உள்ளிப்பூண்டும், ரத்தம் சொட்டின் இடத்திலிருந்து வெங்காயமும் உண்டானதாசொல்லப்படுகிறது
(தொடரும் ...)

மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

ஸத் ஸம்ப்ரதாயம்
(An Unit of the e magazine Voice of Jagadguru)

## ||श्रीशारदास्तोत्रम्||

### श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

### ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

### (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

पुनरुपनयनं पुंसो वृषाधिरोहे न कामिन्याः ।
दर्शयति तत्त्रियोऽपि हि वृषभारूढा त्रिनेत्रेयम् ||२१||
புனருபநயனம்' பும்'ஸோ வ்ரு'ஷாதி⁴ரோஹே ந காமின்யா꞉ .
த³ர்ஶயதி தத்த்ரியோ(அ)பி ஹி வ்ரு'ஷபா⁴ரூடா⁴ த்ரிநேத்ரேயம் ||21||

ஆண்காளை மீதேறிச் சென்றால் மறுபடி அவன் உபநயனம் செய்து கொள்ள வேண்டும். பெண்களுக்கு அந்தக் கட்டுப்பாடு இல்லை என்பதை விருஷபத்தின் மீதமர்ந்த இந்த முக்கண்ணி பெண்களுக்குக் காட்டுகிறாள். (விருஷப வாஹனக் காட்சி ) (21).

नीलकण्ठस्य सार्वज्ञयमूलं त्वत्पादसेवनम् ।
इति संबोधयन्नीलकण्ठस्त्वां सेवते किमु ||२२||
நீலகண்ட²ஸ்ய ஸார்வஜ்ஞயமூலம்' த்வத்பாத³ஸேவனம் .
இதி ஸம்போ³த⁴யந்நீலகண்ட²ஸ்த்வாம்' ஸேவதே கிமு ||22||

நீல கண்டருக்கு (சிவனுக்கு) எல்லாமறிந்தவர் என்ற சிறப்பிற்குக் காரணம் உன் சரண ஸேவை செய்ததே எனக் காட்ட இந்த நீல கண்டம் (மயில்) உன்னைத் தாங்கி வழிபடுகிறதோ?(22)

शिखी मुण्डी जटीत्याद्याः सर्वे त्वत्सेवका इति ।
द्योतनाय शिखी किंवा मातस्त्वामेव सेवते ||२३||
ஶிகீ² முண்டீ³ ஜடீத்யாத்³யா꞉ ஸர்வே த்வத்ஸேவகா இதி .
த்³யோதனாய ஶிகீ² கிம்'வா மாதஸ்த்வாமேவ ஸேவதே ||23||

தாயே / உனது பணியாளர்கள், சிகீ (சிகையுள்ளவர்), சிகையை மழித்த மொட்டையர்கள், ஜடை உள்ளவர்கள் எனப் பலவகைப் பட்டவர் என்பதைக் காட்ட இந்த சிகீ (மயில்) உன்னை (வாஹனமாகி) வழிபடுகிறதோ? (23)

(தொடரும் ...)

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## அத்யாத்ம ராமாயணத்தின் பெருமையும் பயனும்

முனிசிரேஷ்டரே! அத்யாத்ம ராமாயணம் படிப்பதாலும் கேட்பதாலும் ஏற்படும் பலனை முழுமையாக என்னால் கூற இயலாது. என்றாலும், மாசற்றவரே! முன்னர் எனக்குச் சிவபெருமானால் சொல்லப்பட்ட அந்தப் பெருமைகளைச் சிறிதளவு உமக்குச் சொல்கிறேன். மனத்தை ஒருமுகப்படுத்திக் கேட்பீராக.



அத்யாத்ம ராமாயணத்தின் ஒரு சுலோகம், அல்லது, அரை சுலோகத்தைப் பக்தியோடு படிப்பவர், அந்த நொடியிலேயே பாவங்களிலிருந்து விடுபடுகிறார். அத்யாத்ம ராமாயணத்தை, நாள்தோறும், நிலைப்பட்ட மனத்துடன், பக்தியோடுகூட.. முடிந்த அளவு பிறருக்குக் கூறிவருபவர் ஜீவன்முக்தர் என்று சொல்லப்படுகிறார்.

முனிவரே! ஒவ்வொரு நாளும், சோம்பலில்லாமல், பக்தியோடு கூட அத்யாத்ம ராமாயணத்தை வழிபடுபவர்க்கு அசுவமேத யாகம் செய்த பலன் ஏற்படுகிறது. அத்யாத்ம ராமாயணத்தை தற்செயலாகவோ, அசட்டையாகவோ, பிறர் சொல்லக் கேட்கும் மனிதர் கூட பாதகத்திலிருந்து விடுபடுகிறார்.

அத்யாத்ம ராமாயணத்தை (அது எழுதப்பட்டிருக்கும் சுவடியின் அருகே சென்று) நமஸ்காரம் செய்பவர், சந்தேகமில்லாமல், எல்லா தெய்வங்களையும் அர்ச்சனை செய்த பயனைப் பெறுவார். அத்யாத்ம ராமாயணம் முழுவதையும் எழுதி, ஸ்ரீராமபக்தர்களுக்கு வழங்குபவர் அடையும் புண்ணிய பலன்களைக் கேளும். வேதங்களை ஓதுவதாலும் சாஸ்திரங்களை விளக்குவதாலும் உலகில் அடைதற்கரிய நற்பலன்களை அவர் (அத்யாத்ம ராமாயணத்தை எழுதி வழங்குபவர்) அடைவார்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

திருமால் அடியார்களில் சிறந்தவரே! ஏகாதசி நாளன்று, உண்ணாநோன்பிருந்து, பொது அரங்கத்தில் அத்யாத்ம ராமாயண விளக்கம் செய்யும் ராம பக்தர் அடையும் புண்ணிய பலனைக் கேளும் : அவருடைய ஒவ்வொரு சொல்லும் காயத்ரி மகாமந்திரத்தைப் புரஸ்சரணம் செய்த பலனைத் தரும்.

ஸ்ரீராமநவமி நாளில் உபவாசமிருந்து, இரவு நேரத்தில் கண்விழிப்புடன் இருந்து. நிலையான மனத்துடன் அத்யாத்ம ராமாயணத்தை படித்தாலும் கேட்டாலும், ஒருவர் அடையும் புண்ணியத்தைச் சொல்கிறேன். குருக்ஷேத்ரம் முதலிய அனைத்துப் புண்ணிய தீர்த்தத் தலங்களிலும், பல தடவைகள், முழுமையான சூர்யகிரஹண காலத்தில், வியாஸருக்கு நிகரான அந்தணர்களுக்கு, தன் எடையளவு பொருள் தானம் செய்வதால் ஏற்படும் பயனை அடைகிறார் என்பது முக்காலும் உண்மை; சந்தேகமே வேண்டாம்.

எவனொருவன், முகமலர்ச்சியோடு, இரவு பகலாக அதயாதம் ராமாயணத்தை இசைக்கிறோனோ, அவனுடைய கட்டளையை எதிர்பார்தது, இந்திரன் முதலிய தேவர்கள் காத்துக் கிடக்கிறார்கள். தினந்தோறும், நியமமாக, அத்யாதம ராமாயணத்தைப் படிப்பவர் என்னென்ன கர்மாக்களைச் செய்கிறாரோ, அவையெல்லாம் கோடிமடங்கு பெருகிவிடும். அவ்வளவு அதிகமான பலனைத் தரும். அத்யாத்ம ராமாயணத்தில் உள்ள ஸ்ரீராமஹ்ருதயத்தை, மிக்க அமைதியான மனத்தோடு படிப்பவர். பிருமமஹத்தி செய்தவராக இருந்தாலும், மூன்று நாட்களுக்குள்ளாகவே ,பாவம் தொலைந்து புனிதம் அடைவார்: ஆஞ்ஜநேய விக்ரஹத்தின் எதிரில், நாள்தோறும் மூன்று தடவை ஸ்ரீராமஹ்ருதயத்தைப் படிப்பவா, எல்லா விருப்பங்களையும் அடைந்தவராக ஆவார்.

துளசி அல்லது அரசமாத்தின் அருகில் இருந்து கொண்டு ஸ்ரீராம ஹ்ருதயத்தைப் படித்தால், அதன் ஒவ்வோர் எழுத்தும் பிரும்மஹத்தி போன்ற மாபெரும் பாவங்களிலிருந்தும் விடுதலையைத் தரும். ஸ்ரீராமகீதையின் பெருமையை, முழுமையாக, சங்கரர் அறிவார்; அதில் பாதியளவு மலைமகள் அறிவாள்; முனிவரே! அதில் பாதியளவு நான் அறிவேன். அதைப் பற்றி (ஸ்ரீராமகீதையின் பெருமையைப் பற்றி) நாள் சிறிது சொல்கிறேன். முழுவதையும் என்னால் சொல்ல இயலாது. அதை அறிந்த உடனேயே மக்கள் மனத்தூய்மை அடைந்துவிடுவார்கள். (தொடரும்…)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்